# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2293/77 - 2022 අගෝස්තු මස 20 වැනි සෙනසුරාදා - 2022.08.20

2293/77 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கோவை இல.: KEG/LAN/AQU/A3/01/119.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/10/2019/VE/375.

கேகாலை பிரதேச செயலகப் பிரிவில் 2016 மண் சரிவின் மூலம் அகதிகலான பொதுமக்களை மீளக் குடியேற்றுவதற்காக காணி எடுத்தல் உதுகொட - யட்டிதேரிய தோட்டப் பிரிவிற்காக தேவைப்படும் காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 56பி உந்துகொட கிராம அலுவலர் பிரிவில், பஹல யட்டிதேரிய கிராமத்தினுல் அமைந்துள்ள கேகாலை நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. கே. 3859 ஆம் இலக்கம் கொண்ட வரை படத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டிற்கான எல்லைகள்.

**1. துண்டு இல. 1; காணியின் பெயர்: யட்டிதேரிய தோட்டம் உந்து கொட பிரிவு; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி: கேகாலை பெருந்தோட்டக் கம்பனி, இல. 110, நாவின்ன, மஹரகம, காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு, இல. 175, கடுவலை வீதி, பத்தரமுல்லை; விஸ்தீரணம்: 0.0506 ஹெக்டயார்.**

வடக்கு: கேகாலை பெருந்தோட்டக் கம்பனி உரித்துக் கோருகின்ற யட்டிதேரிய தோட்டம்;
கிழக்கு: கேகாலை பெருந்தோட்டக் கம்பனி உரித்துக் கோருகின்ற யட்டிதேரிய தோட்டம் மற்றும் வீதி;
தெற்கு: வீதி மற்றும் கேகாலை பெருந்தோட்டக் கம்பனி உரித்துக் கோருகின்ற யட்டிதேரிய தோட்டம்;
மேற்கு: கேகாலை பெருந்தோட்டக் கம்பனி உரித்துக் கோருகின்ற யட்டிதேரிய தோட்டம்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேகாலை பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர்,
கேகாலை.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2022, ஓகத்து 15.

EOG 8 - 0209

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/2/82.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2016/A/399.

காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2273/75 ஆம் இலக்க 2022.03.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவு 7 இன் கீழான அறிவித்தலில் காணியின் உரிமை கோருவதற்கான நேர்முகத் தேர்வு 2022.09.19 ஆந் திகதி என திருத்தப்பட்டு, நட்டஈடு மற்றும் நட்டஈடு கணக்கிடப்பட்ட முறை என்பவற்றை இரண்டு பிரதிகள் கொண்ட ஆவணத்தை 2022.09.12 ஆந் திகதிக்கு முன் அறிவிக்கப்படல் வேண்டும் என திருத்தப்படுகின்றன என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

குசலக நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
கம்புருபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புருபிட்டிய,
2022, ஓகத்து 16.

EOG 08 - 0210

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.